## சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை 2013–14 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110 ன் கீழ் 09.04.2013 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – கிராம ஊராட்சிகளில் கூடுதலாக 16726 துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்தல் – துப்புரவு பணியாளர்களுக்கான பணி நிபந்தனைகள் மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள் குறித்த நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண்.130

நாள் 14.09.2013
திருவள்ளுவர் ஆண்டு 2044
படிக்கப்பட்டவை

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.26279/2013/இ2 நாள் 10.4.2013, 03.07.2013 மற்றும் 07.08.2013.
2. அரசாணை (நிலை) எண்.129 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (,5) துறை, நாள். 14.09.2013
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.27279/2013/இ2, நாள்.27.07.2013.

**ஆணை :**

09.04.2013 அன்று சட்டமன்ற பேரவையில் விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கிராம ஊராட்சிகளில் கூடுதலாக மக்கள் தொகைக்கு ஏற்ப 16,726 துப்புரவு பணியாளர் பணியிடங்களை ஏற்படுத்தி துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்து அவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் 2000/– ரூபாயும், அகவிலைப்படியாக 40/– ரூபாயும் (அரையாண்டு) வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2. மேற்காணும் அறிவிப்பின்படி மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட கடிதம் மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரிடம் கருத்துரு பெறப்பட்டு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கிராம ஊராட்சிகளில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதலாக 16,726 துப்புரவு பணியாளர்களை நியமித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கிராம ஊராட்சிகளில் கூடுதலாக நியமிக்கப்படும் துப்புரவு பணியாளர்களுக்கான பணி நிபந்தனைகள் மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இவ்வரசாணையின் பிற்சேர்க்கையில் உள்ளவாறு அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதன்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ளவாறு கிராம ஊராட்சிகளில் கூடுதலாக நியமிக்கப்படும் துப்புரவு பணியாளர்களுக்கான பணி நிபந்தனைகள் மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள் நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி.சங்கர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் (சென்னை நீங்கலாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதிகணக்குகள் துறை, சென்னை–108
அனைத்துத் துறை அரசுச் செயலாளர்கள், சென்னை–9
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை– 18 /35/6.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை– 15
நிதி (ஊரக வளர்ச்சித் )துறை, சென்னை–9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்து பிரிவுகள்
இருப்புக்கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்